GWOP : 2/2024

நாள் : 10.12.2024

ம.சா. : 1

பெயர் : சுதா

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

திருவெண்காடு, சாலைத்தெருவில் வசிக்கும் கணேசன் மகன் கலைமோகன் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் கணவரின் உறவு முறையில் எனக்கு மாமன் மகன். 24.08.2022 அன்று என் சகோதரர் ரகுவிற்கு திருமணம் நடந்தது என்றால் சரி. அந்த திருமணத்திற்கு எதிர்மனுதாரரும் வந்திருந்தார் என்றாலும் நான் அங்கு இல்லை என்றாலும் நான் எங்கே என்று கேட்டபோது நான் கலைமோகனுடன் வெளியில் போயிருந்தேன் என்றாலும் நான் வந்தபிறகு இது சம்பந்தமாக என்னிடம் கேட்டபோது நான் அதற்கு சண்டை போட்டேன் என்றால் அது பொய். எதிர்மனுதாரர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் சேர்மனாக இருந்த B.V பாரதி க்கு ஓட்டுநர் என்றால் சரி. எதிர்மனுதாரர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் முன்னாள் சேர்மனாக இருந்த B.V பாரதி நிலத்தில் டிராக்டர் ஓட்டும்போது எதிர்பாராதவிதமாக விபத்து ஏற்பட்டு கால் துண்டிக்கப்பட்டது என்றால் சரி. இதற்கு முழு மருத்துவ செலவு மற்றும் செயற்கை கால் பொருத்தும் செலவுகளை B.V பாரதி மற்றும் எதிர் மனுதாரின் தம்பி செல்வம் ஆகியோர் ஏற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் தான் அந்த செலவுகளை பார்த்துக்கொண்டேன். அவர்கள் வந்து கூட பார்க்கவில்லை நான் தான் மருத்துவமனையில் இருந்து பார்த்துக்கொண்டேன். நான் என்னுடைய 5 சவரன் நகையை பேங்கில் வைத்து மருத்துவ செலவுகளை செய்ததாக சொல்லியிருப்பதால் எந்த பேங்கில் எந்த தேதியில் வைத்தேன் என்று அபிடவிட்டில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 13.06.2021 ல் முத்தூட் வங்கியில் வைத்தேன். மியாட் மருத்துவமனைக்கு எதிர்மனுதாரரை அழைத்து போன அன்று. 23.10.2022 அன்று என் குழந்தையை கொதிக்கும் வெந்நீரை குடிக்கும்படி காட்டு மிராண்டி தனமாக அடித்ததால் குழந்தை பயந்து அதை வயிற்றில் ஊற்றிக்கொண்டதால் குழந்தைக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது என்றால் தவறு. என்னை செப்டம்பர் மாதம் 2022 ல் அடித்து

V. Sutha

வீட்டை விட்டு துரத்திவிட்டார் நான் விடுதியில் தங்கினேன். அந்த தேதியில் குழந்தை எதிர்மனுதாரரிடம் தான் இருந்தது. வழக்கறிஞர் மீண்டும் 23.09.2022 அன்று குழந்தையை கொதிக்கும் வெந்நீரை குடிக்கும்படி காட்டு மிராண்டி தனமாக அடித்ததால் குழந்தை பயந்து அதை வயிற்றில் ஊற்றிக்கொண்டு குழந்தைக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டது என்றால் தவறு. 22.09.2022 அன்றே என்னை என் கணவர் வீட்டை விட்டு அடித்து துரத்திவிட்டார். நான் திருவெண்காடு அரசு மருத்துவமனைக்கு குழந்தையை அழைத்து சென்று சிகிச்சை அளித்தேன் என்றால் பொய். அங்கு கலைமோகன் வந்து என்னிடம் பேசிக்கொண்டிருந்தார் என்றால் பொய். அதே நாளில் எதிர்மனுதாரர் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்து என்னையும் குழந்தை ஹசீனாவையும் எங்கே என்று கேட்டபோது என் மகன் ஷர்வின் ஹசீனாவிற்கு வெந்நீர் ஊற்றிவிட்டதால் அம்மா ஆஸ்பத்திரிக்கு அழைத்துபோனதாக சொல்லியிருக்கிறான் என்றால் தவறு. உடனே எதிர்மனுதாரர் திருவெண்காடு அரசு மருத்துவமனைக்கு என்னை பார்க்க வந்தபோது நான் கலைமோகனுடன் பேசிக்கொண்டிருந்தேன் என்றாலும் இந்த சங்கதி குழந்தை ஹசீனாவுக்கு தெரியும் என்றால் சரியல்ல. 22.09.2022 அன்று குழந்தை வெந்நீர் கேட்டது. எப்போதும் குழந்தை வெந்நீர் குடிக்கும் குடிக்க கொடுத்த வெந்நீரை புண் உடம்பில் ஊற்றிக்கொண்டது. அதற்காக மருத்துவமனைக்கு அழைத்துபோனேன். யாருடனும் அங்கு பேசிக்கொண்டு இல்லை. இந்த விவரம் குழந்தைக்கு தெரியும். எழுதிக்கொடுத்த மருந்தை வாங்க மெடிக்கல் ஷாப்புக்கு போனேன் அப்போது தான் எதிர்மனுதாரர் வந்தார் என்னை பார்த்தார். அந்த சமயத்தில் எதிர்மனுதாரர் கலைமோகனிடம் நீ எதற்கு இங்கு வந்தாய் என்று கேட்டபோது அவர் குழந்தை மீது வெந்நீர் ஊற்றிவிட்டது என்றும் சுதா போன் செய்து வரசொன்னதால் வந்தேன் என்று சொல்லியுள்ளார் என்றால் பொய். எதிர்மனுதரர் குழந்தைக்கு எதாவது என்றால் எனக்கு போன் செய்ய வேண்டியது தானே என்று கேட்டு குழந்தைக்கு சிகிச்சை அளித்து என்னையும் குழந்தையையும் வீட்டிற்கு கூட்டி வந்துவிட்டார் என்றால் சரியல்ல. கலைமோகன் யாருக்கோ தேள் கொட்டிவிட்டது என்று திருவெண்காடு அரசு மருத்துவமனைக்கு வந்திருக்கிறார். குழந்தையை பார்த்துவிட்டு விசாரித்திருக்கிறார். நான் அப்போது மெடிக்கல் ஷாப்பிற்கு போயிருந்தேன். கலை மோகன் என் குழந்தையுடன்

V. Sutha

பேசியதை நான் பார்க்கவில்லை. அப்போது அங்கு வந்த எதிர் மனுதாரர் மெடிக்கல் ஷாப்பிலிருந்து வந்த என்னை அடித்து ரோட்டில் சேலையை உருவி அவமானப்படுத்தினார் நானும் குழந்தையும் சொல்லியும் கேட்கவில்லை. குழந்தை அம்மா யாரிடமும் பேசவில்லை என்று சொல்லியும் கேட்கவில்லை. இது தான் நடந்தது. அன்று இரவு வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டு தூங்கிவிட்டோம் என்றாலும் இரவு 11 மணி வாக்கில் பாத்ரூம் போவதற்காக எதிர் மனுதாரர் எழுந்தபோது குழந்தைகள் மட்டும் தூங்கிகொண்டிருந்தார்கள் என்றாலும் என்னை அங்கு காணவில்லை என்றாலும் சரியல்ல. அன்று என்னை அடித்து சித்ரவதைதான் செய்து கொண்டிருந்தார்கள் யாரும் தூங்கவில்லை. நான் மருந்து குடித்து இறந்துவிடலாம் என்று இருந்தேன். அப்போது எதிர்மனுதாரர் எப்படியும் இன்று மருந்து குடித்து இறந்துவிடுவாள் நான் வேறு யாருடனோ படுத்திருந்தாள் என்று சொல்லி கேஸை முடித்துவிட்டு போய்விடுவேன் என்று சொன்னார். அப்படி பட்டவருடன் எப்படி வாழ்வது என்று நான் வீட்டை விட்டு விடுதிக்கு போய்விட்டேன். குழந்தைகளை கேஸ் போட்டு வாங்கிக்கொள்ளலாம் என்று நினைத்தேன். அன்று இரவு முழுவதும் மாற்றுதிறனாளியான எதிர்மனுதாரர் scooty ல் என்னை தேடினார் என்றாலும் அப்படி தேடும்போது கலைமோகன் வீட்டில் லைட் எரிந்திருக்கிறது என்றும் அவரது பெற்றோர் கலைமோகனை காணவில்லை என்று தேடியிருக்கிறார் என்றால் சரியல்ல. நான் யாருடனும் போகவில்லை. எதிர் மனுதாரர் பொய் சொல்கிறார். அன்று இரவே அதாவது 23.09.2022 அன்று கலைமோகனுடன் நான் தலைமறைவாகிவிட்டேன் என்றால் சரியல்ல. 22.09.2022 அன்று நான் வீட்டை விட்டு போனேன். நான் மட்டும் தான் போனேன் யாருடனும் போகவில்லை. 24.09.2022 அன்று எதிர்மனுதாரர் என்னுடைய பெற்றோர் வீட்டிற்கும் உறவினர் வீட்டிற்கும் போன் செய்து கேட்டபோது யாரும் இங்கு வரவில்லை என்று சொல்லிவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அங்கு போனால் மீண்டும் என்னை எதிர்மனுதாரருடன் சேர்த்து வைத்துவிடுவார்கள் என்பதால் அங்கு போகவில்லை ஏற்கனவே அவர்களிடம் என் கணவர் செய்த கொடுமையை முறையிட்டும் அவர்கள் எனக்கு எந்த உதவியும் செய்யவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் ஆனால் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்போது இவர் தலைமறைவாகிவிடுவார். 24.09.2022 அன்று

V. Sutha

காலை 10.00 மணிமுதல் என்னுடைய மொபைலும் கலைமோகனின் மொபைலும் switch off செய்யப்பட்டிருந்தது என்றால் என்னுடைய செல்போனை switch off செய்து விட்டேன். கலைமோகனின் மொபைலும் switch off செய்யப்பட்டிருந்ததா என்று எனக்கு தெரியாது. 24.09.2022 அன்று எதிர்மனுதாரர் திருவெண்காடு காவல்நிலையத்திற்கு காலை 11.00 மணிக்கு சென்று என்மனைவியையும் கலைமோகனையும் காணவில்லை. கண்டுபிடித்துக்ககொடுங்கள் என்று மனுக்கொடுத்தார் என்றால் அப்போது அது பற்றி எனக்கு தெரியாது. இரண்டு நாள் கழித்து என் அம்மா பொய்யான புகார் கொடுக்கிறார்கள் நீ இங்கு வந்துவிடு என்று சொன்னார்கள் அப்போது தான் புகார் கொடுத்தது தெரியும். புகாரை பெற்றுக்கொண்ட காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் என்னுடைய போட்டோ என்னுடைய செல்போன் நம்பர் கலைமோகனின் செல்போன் நம்பர் ஆகியவற்றை பெற்றுக்கொண்டார்கள் என்றால் அது பற்றி அப்போது எனக்கு தெரியாது. பின்னிட்டு தெரிந்து கொண்டேன். எதிர்மனுதார் நான் நகை பணத்தை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டதாக புகார் கொடுத்திருந்தார். அப்படி எடுத்துபோகவில்லை என்று சொல்வதற்காக காவல் நிலையத்தில் ஆஜரானேன். நான் சொல்வது பொய் என்றாலும் திருவெண்காடு காவல் ஆய்வாளர் எனக்கும் கலைமோகனுக்கும் போன் செய்தபோது switch off செய்யப்பட்டுள்ளது என்று வந்ததால் கண்டுபிடிக்க முடியாமல் என்னுடைய ஆதார் அட்டை ஜெராக்ஸ் கலைமோகனின் ஆதார் அட்டை ஜெராக்ஸ் ஆகியவற்றை பெற்றுக்கொண்டு ஆய்வு செய்கையில் நானும் கலைமோகனும் கோயம்புத்தூரில் ஒரே ATM ல் பணம் எடுத்தது தெரியவந்துள்ளது என்றால் சரியல்ல. நான் கோயம்புத்தூருக்கு யாருடனும் போகவில்லை. நான் சீட்டு பணம், வட்டிப்பணம், பேங்க் லோன், குழுக்கடன் ஆகியவை எடுத்து எதிர்மனுதாரருக்காக செலவு செய்தேன். சம்பளம் வந்தபிறகு அந்த தொகைகளை செலுத்த என் தோழியிடம் என்னுடைய ATM கார்டை கொடுத்து பணம் போட சொன்னேன். பணம் எடுக்கவில்லை. அதன் பிறகு திருவெண்காடு காவல் நிலையத்தில் குற்ற எண். 214/2022 woman missing என்ற வழக்கு 29.09.2022 அன்று பதிவு செய்யப்பட்டது என்றால் எந்த தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. ஆனால் நான் விசாரணைக்கு திருவெண்காடு காவல் நிலையத்தில் ஆஜரானேன். கலைமோகன் ஆளுங்கட்சியின் முக்கிய பிரமுகர் என்பதால் சிறப்பு உதவி ஆய்வாளர்

V. Suth

சுவாமிநாதன் மற்றும் ஆய்வாளர் அண்ணாதுரை ஆகியோர் கலைமோகனை கூப்பிட்டு விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் கட்சியில் இல்லை. அவரை கூப்பிட்டு விசாரித்தார்கள். கலைமோகன் என்பவரை விசாரிக்கவில்லை என்றாலும் இதை ஆய்வாளரை கூப்பிட்டு விசாரித்து தெரிந்துகொள்ள முடியும் என்றாலும் காவல் நிலைய CCTV footage ஐ பார்த்து தெரிந்து கொள்ளலாம் என்றால் சரியல்ல. விசாரித்தார்கள். கலைமோகனை கூப்பிட்டு விசாரித்திருந்தால் கலைமோகனிடம் ஸ்டேட்மென்ட் வாங்கியிருப்பார்கள் என்றாலும் போலிசார் என்னிடமோ எதிர்மனுதாரரிடமோ கலைமோகனிடமோ ஸ்டேட்மென்ட் எதுவும் வாங்காமல் வழக்கை முடித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. என்னையும் எதிர்மனுதாரரையும் கூப்பிட்டு விசாரித்தார்கள் சேர்ந்து வாழ சொன்னார்கள். நான் குழந்தைகளுக்காக வாழ்வதாக சொன்னேன் எதிர்மனுதாரர் அவரது தம்பி பேச்சை கேட்டுக்கொண்டு வாழ முடியாது என்று சொல்லிவிட்டார் போலிசார் கேஸை முடித்துகொள்ளலாம் என்று கேட்டபோது எழுதிக்கொடுக்க மறுத்துவிட்டார். அண்ணாதுரை ஆய்வாளர் மீது உயரதிகாரிகளிடம் எனக்கு சார்பாக பேசுவதாக புகார் செய்துவிட்டார். நான் 23.09.2022 அன்று வீட்டை விட்டுபோகும்போது குழு மூலம் வாங்கிய 60,000/- ரூபாய் பணம் 27 பவுன் நகைகள் ஆகிய அனைத்தையும் எடுத்துகொண்டு போய்விட்டேன் என்றாலும் எதிர்மனுதாரரிடம் என்னுடைய நகையோ பணமோ இல்லை என்றால் சரியல்ல. எனக்கு 15 சவரன் நகை திருமணத்தின்போது போட்டார்கள். குழந்தைகளுக்கு 3 1/2 சவரன் நகை என் பெற்றோர் வீட்டில் போட்டார்கள் அதை வீடு கட்டுவதற்காக அடமானம் வைத்து செலவு செய்தார். வீடு குடிபோகும்போதும் காது குத்தும்போதும் 2 1/2 சவரன் நகை போட்டார்கள் அதையும் எதிர்மனுதாரர் அடகு வைத்து செலவு செய்து விட்டார். நான் 4 சவரன் ஆரம் எதிர்மனுதார் வீட்டில் வைத்து விட்டு வந்தேன். நான் எந்த பணமும் நகையும் எடுத்து போகவில்லை. வீடு கட்டுவதற்கு என்னுடைய நகைகளை வைத்து செலவு செய்யவில்லை என்றாலும் அது பசுமை வீடு திட்டத்தில் கட்டப்பட்டது என்றாலும் அந்த விஷயம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வீடு கட்ட ஏற்பட்ட மற்ற செலவுகளை எதிர்மனுதாரர் கார் ஓட்டி சம்பாதித்து செய்தார் என்றால் சரியல்ல. வெறும் 8000 ரூபாய் சம்பளத்திற்கு தான் எதிர்மனுதாரர் சேர்மேனிடம் வேலை பார்த்தார்.

V. Sutha

எதிர்மனுதாரர் பணத்தை திருப்பி தர மாட்டார் என்று நினைத்து என்னை கூப்பிட்டு 1 லட்சம் ரூபாயை எதிர்மனுதாரர் கடன் கேட்டதால் தருகிறோம் என்றும் அதற்கு 5000 ரூபாய் மாதாமாதம் பிடித்துகொள்வோம் என்றும் என்னிடம் கையெழுத்து வாங்கிகொண்டுதான் சேர்மேன் வீட்டில் கடன் கொடுத்தார்கள். வீடு பேஸ்மெண்ட் போடும்போது நான் மகளிர் குழுக்கடன் 50,000/– ரூபாய் வாங்கி கொடுத்தேன். நான் சொல்வது பொய் என்றாலும் எதிர்மனுதாரர் காலை இழந்து விட்டதால் அவரை உதாசீனப்படுத்தி கலைமோகனுடன் சென்றுவிட்டேன் என்றால் பொய். குழந்தைகள் என் பெயரை சொன்னாலே கோவப்படுகிறார்கள் என்றால் தவறு. என்னை பற்றி குழந்தைகளிடம் தவறாக சொல்லி வைத்திருக்கிறார். நான் படித்துகொண்டிருக்கிறேன். நான் வேறு யாருடனோ வாழ்ந்து கொண்டிருப்பதாக பொய் புரளி பரப்புகிறார்கள். என் குழந்தைகள் என்னை பார்க்கவும் பேசவும் மறுத்து கோவப்படுகிறார்கள் வெட்கப்படுகிறார்கள் என்றால் என்னை பற்றி குழந்தைகளிடம் தவறாக சொல்லி வைத்திருக்கிறார். எதிர்மனுதாரர் குழந்தைகளை கண்ணை இமைகாப்பதுபோல் காத்து வருகிறார் என்றாலும் குழந்தைகளுக்காகவே வாழ்கிறார் என்றாலும் எனவே நான் தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. குழந்தைகளை மனுதாரர் பார்ப்பதற்கு பள்ளிக்கு போனால் குழந்தைகள் மனுதாரர் எனது அம்மா இல்லை என்று கூறி பார்க்க மறுக்கிறார்கள் என்றால் சரியல்ல. பள்ளிக்கு போனால் குழந்தைகளை பார்க்க என்னை அனுமதிப்பதில்லை. எதிர்மனுதாரரின் உறவினர்கள் அந்த பள்ளியில் வேலை பார்க்கிறார்கள். அவர்களிடம் சொல்லி என்னை பார்க்க மறுக்கிறார்கள். குழந்தைகள் மனுதாரர் செய்த தவறை கண்ணால் பார்த்ததால் மனுதாரரிடம் பேசவோ பார்க்கவோ வாழவோ மறுக்கிறார்கள் என்றால் சரியல்ல. என்னை பற்றி குழந்தைகளிடம் தவறாக சொல்லி வைத்திருக்கிறார்.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

10/12/24

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

V. Sutta

10/12/24